DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/22 Crime No. 120/22 Station: BHAVANI

| Name | PW1-திருமதி.சாந்தி | Caste | |
|---|---|---|---|
| Husband Name | சொக்கலிங்கம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 49 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 27.06.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்**

**முதல் விசாரணை-**

1) நான் தற்போது பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக 03.03.2021 ம் தேதியிலிருந்து நான் பணிபுரிந்து வருகிறேன். அசல் வழக்கு எண்.147/13 என்ற வழக்கு மாண்மை பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் பாட்டப்பன் என்பவர் குழந்தைவேலு என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்து வழக்கு நடைபெற்று 30.04.2014 ம் தேதியன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி அ.வ.எண்.147/13 வழக்கிற்கு வழக்கு தரப்பினராக இல்லாத ஆஜர் எதிரி சந்திரா என்பவர் கடந்த 21.03.2022 ம் தேதியன்று மேற்படி நீதிமன்ற தலைமை எழுத்தர் அறைக்கு வந்து தான் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த மனுக்கள் என்ன ஆனது என்று பார்க்கவேண்டும் என்றும் கூறினார். மேற்படி மனுக்கள் திருப்பப்பட்டுவிட்டதாக கூறினேன்.

2) மனுக்களை நீதிமன்ற உதவியாளர் திரு.ஆடலரசன் என்பவரை எடுத்து சந்திராவிடம் தருமாறு கூறினேன். அவரும் எடுத்து சந்திராவிடம் கொடுத்தார். மனுக்களை வாங்கி பார்த்த சந்திரா எப்படி இந்த மனுக்களை திருப்பமுடியும் என்று கேட்டு, சரியாக மனுக்களை பார்க்கமாட்டீர்களா என்றும், Return யை இப்போதே Represent பன்னுகிறேன் என்றும் கூறினார். அதற்கு நான் Return ல் கையொப்பம் செய்து Represent செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் மனுக்களை பெற்றுக்கொண்டு, வெளியே சென்றுவிட்டு, Attended and Represented என்று எழுதி, Represent செய்தார். அப்போது அவர் மனுக்களை நீதிபதி சரியாக பார்ப்பதில்லை என்றும், சரியான பிரிவுகளின் கீழ் மனு தாக்கல் செய்யுமாறு மேற்குறிப்புடன் மனுக்கள் திருப்பப்பட்டிருந்ததால், எந்த பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யவேண்டும் என்று நீங்கள் தான் கூறவேண்டும் என்று கூறி, என்னிடம் வாக்குவாதம் செய்து தகாத வார்த்தைகளால் பேசினார். நான் இப்படி சத்தம் போட்டு வாக்குவாதம் செய்தால், பணி நேரத்தில் நாங்கள் எவ்வாறு வேலை செய்வது என்றும், எங்கள் வேலையை நீங்கள் இடையூறு செய்யக்கூடாது என்றும் எடுத்து கூறினேன். அதற்கு அவர் கூச்சலிட்டு நான் அப்படி தான் கேள்வி கேட்பேன். நான் கேட்கும் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று கூறி, சென்றுவிட்டார்.

3) பிறகு 23.03.2022 ம் தேதியன்று மீண்டும் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த எதிரி அவரது மனுக்களை குறித்து என்னிடம் கேட்டார். அதற்கு நான் பெஞ்ச் கிளார்க்கிடம் கேளுங்கள் என்று கூறினேன்.அவர் பெஞ்ச் கிளார்க் திரு.ஆனந்த்பட்டுவிடம் சென்று மனுக்கள் குறித்து கேட்டபோது மேற்படி திரு.ஆனந்த்பட்டு அசல் வழக்கு பிரிவில் இருக்கும் பெஞ்ச் கிளார்க் திறந்த நீதிமன்றத்தில் இருப்பதால், அவர் வந்தவுடன் அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள் என்று கூறினார். அசல் வழக்கு பிரிவில் உள்ள பெஞ்ச் கிளார்க் திருமதி.கலைச்செல்வி அவர்கள் மேற்படி மனுக்கள் மீண்டும் திருப்பப்பட்டு, அந்த மனுக்களை என்னிடம் கொடுத்தார். நான் அந்த மனுக்களை திருப்பப்பட்ட மனுக்கள் வைக்கும் இடத்தில் வைத்தேன். பிறகு எதிரி அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு மீண்டும் நீதிமன்ற அலுவலகம் வந்து மனுக்கள் குறித்து கேட்டார். நான் உதவியாளரிடம் கூறி மனுக்களை எடுத்து வருமாறு கூறினேன். எதிரி மனுக்களை உதவியாளரிடமிருந்து பெறும்போது, உதவியாளரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு எந்த பிரிவின் கீழ்தான் மனு தாக்கல் செய்யவேண்டும் அதை தெளிவாக கூறுங்கள் என்றார்.

4) நான் எதிரியிடம் நீங்கள் அவரிடம் கேட்கக்கூடாது என்றும், தகுந்த பெஞ்ச் கிளார்க்கிடம்தான் கேட்கவேண்டும் என்றும் கூறினேன். அதற்கு எதிரி நான் என்ன உங்கிட்டயா பேசினேன், நீ பேசக்கூடாது என்று என்னிடம் ஒருமையில் பேசினார். அன்று நீதிபதி அம்மா விடுமுறையில் இருந்தார். நான் எதிரியிடம் ஏன் இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள், முதலில் வெளியே செல்லுங்கள் என்று கூறினேன். அதை கண்டுகொள்ளாத எதிரி மீண்டும் மீண்டும் என்னிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதனால் நான் நீதிமன்ற பணியிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்களிடம் எதிரி தன்னை வேலை செய்யவிடாமல் சத்தம் போட்டுக்கொண்டிருப்பதாக வாய்மொழியாக புகார் அளித்தேன்.

5) உடனடியாக அங்கு வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியிடம் நீதிமன்றத்தில் வந்து இவ்வாறு சத்தம் போடக்கூடாது என்றும் உங்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்களை நீங்கள் வாங்கிக்கொண்டு செல்லுங்கள் என்றும் கூறினார். அதற்கு எதிரி சிறப்பு உதவி ஆய்வாளரிடம் நீங்கள் எதற்காக இங்கு வந்து கேட்கிறீர்கள், உங்களுக்கும் இதற்கும் என்ன சம்மந்தம் என்றும் கூறி வாக்குவாதம் செய்து விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். மீண்டும் மறுநாள் 24.03.2022 அன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த எதிரி மீண்டும் மனுக்களை Represent செய்தார். மனுக்களை சரிபார்த்து நீதிபதி அம்மாவிடம் கொடுத்தோம். நீதிபதி அம்மா மனுக்களை பார்த்துவிட்டு, மனுக்களை Return செய்துவிட்டார். Return செய்த மனுக்களை எதிரியிடம் கொடுத்தோம். அதற்கு எங்களிடம் பிரச்சனை செய்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

6) சத்தம் கேட்டு நீதிபதி அம்மா, திறந்த நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற அறைக்கு வந்தார். நீதிபதி அம்மா மாடிப்படி ஏறும்போது, எதிரி படியில் இறங்கினார். அங்கேயே நீதிபதி அம்மா எதிரியிடம் ஏன் இவ்வாறு தகராறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கூறினார். நீதிபதி அம்மாவிடமும் எதிரி வாக்குவாதத்தில் ஈடுபட்டார். நீதிபதி அம்மா உடனடியாக நீதிமன்ற அலுவலிலிருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்களை அழைத்தார். நீதிபதி அம்மா

என்னை புகார் கொடுக்குமாறு கூறினார். ஏற்கனவே கடந்த 17.02.2021ம் தேதியன்று CR19 பதிவேட்டில் மனுவை Return எடுக்கும்போது, Complaint given to Registrar Vigilance என்று எழுதிவிட்டு சென்றிருக்கிறார். எதிரி தொடர்ந்து தகாத வார்த்தைகளால் பேசி, நீதிமன்ற பணியிலிருக்கும்போது, வாக்குவாதத்தில் ஈடுபட்டு நீதிமன்ற ஊழியர்களை பணி செய்யவிடாமல் மன உளைச்சலை ஏற்படுத்தி வந்ததால், நீதிபதி அம்மாவின் உத்தரவின்படி, எதிரி மீது நான் தட்டச்சு செய்த புகார் மனுவை 24.03.2022 ம் தேதியன்று பவானி காவல்நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் எதிரியால் குறுக்கு விசாரணை-**

1) நான் கொடுத்த புகார் மனுவின்பேரில், போலீசார் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை சரியாக உள்ளதென்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 3 ல் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட நேரம் 15.00 மணி முதல் 16.00 மணிவரை என்றால் சரி. முதல் தகவல் அறிக்கையில் 24.03.2022 அன்று 15.00 மணிக்கு பவானி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.பி.எஸ். சரவணன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அவரிடம் நான் எழுத்துமூலமான புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். O.S.No.147/2013 வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது, 2014 ம் ஆண்டே வழக்கு முடிவு பெற்றுவிட்டதால், இந்த வழக்கின் விவரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் இருக்கும் அறையில் CCTV கேமரா உள்ளதென்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க இருசக்கர வாகனத்தில் சென்றேன். நீதிமன்றத்தில் 3 இடங்களில் CCTV கேமராக்கள் உள்ளது.

2) காவல்நிலையத்தில் CCTV கேமராக்கள் உள்ளதா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அ.சா.ஆ.1 புகார் மனுவை எனது அலுவலகத்தில் உள்ள கணினியில் வைத்து டைப் செய்தேன். 24.03.2022 அன்று மதியம் 3.00 மணிக்கு நான் நீதிமன்ற அலுவலகத்தில் இருந்தேன். அன்றைய தினம் மதியம் 02.45 மணிக்கு நீதிமன்ற ஊழியர் திரு.ஈஸ்வரன் என்பவர் என்னை எனது அலுவலகத்திற்கு வந்து அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அரசுதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட CCTV மற்றும் Pendrive பதிவு காட்சிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. ஒரு மனு தாக்கல் செய்தால், அதனை நம்பர் பன்னுபவர் யார் என்றால் பெஞ்க் கிளார்க் ஆவார்.

3) சம்பவ தினத்தில் யார் பெஞ்ச் கிளார்க்காக இருந்தார் என்றால் திருமதி.கலைச்செல்வி ஆவார். 23.03.2022 அன்று இவ்வழக்கின் எதிரி என்னை பார்த்து என்ன தகாத வார்த்தை சொன்னார் என்றால் "உங்கிட்ட கேட்கல, நீ வாய மூடு" என்று சொன்னார். நான் சொன்ன நேரத்தில் ,சொன்ன விதத்தில் காவல்நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி எவ்வித தகாத வார்த்தைகள் பேசவில்லை என்றாலும், எதிரியின் மீது பொய்யாக

புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி நீதிமன்ற இமெயில் முகவரிக்கு தொடர்ச்சியாக மனு தாக்கல் செய்வதை வழக்கமாக வைத்துள்ளார்.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/22 Crime No. 120/22 Station: BHAVANI

| | | | |
|---|---|---|---|
| Name | PW2- திரு. ஆடலசரன் | Caste | |
| Father Name | கிருஷ்ணன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 58 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 27.06.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்**

**முதல் விசாரணை-**

1) நான் தற்போது பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மாண்புமிகு பவானி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.147/13 என்ற வழக்கு நடைபெற்று 2014 ம் வருடம் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கில் வழக்கு தரப்பினராக இல்லாத ஆஜர் எதிரி சந்திரா மேற்படி அசல் வழக்கில் பல மனுக்களை தாக்கல் செய்தார். அந்த மனுக்கள் நீதிமன்றத்தால் திருப்பப்பட்டது. கடந்த 21.03.2022 அன்று சந்திரா நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து, தலைமை எழுத்தரிடம் திருப்பப்பட்ட மனுக்கள் குறித்து, நீங்கள் எவ்வாறு இந்த மனுக்களை Return செய்யலாம் என்று வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். அதற்கு தலைமை எழுத்தர் மனுக்களை நாங்கள் Return செய்வதில்லை எனவும், நீதிபதி அம்மாதான் Return செய்கிறார் என்றும் கூறினார். அதற்கு சந்திரா அது குறித்து எனக்கு தெரியாது, திருப்பப்பட்ட ஒவ்வொரு மனுக்களுக்கும் நீங்கள்தான் பதில் சொல்லவேண்டும் என்று கூறி தகராறு செய்தார்.

2) அப்போது சந்திரா தலைமை எழுத்தரை ஒருமையில் பேசி திட்ட ஆரம்பித்தார், தகாத வார்த்தைகளையும் திட்டினார். "கடவுள் இருக்கிறார், அவர் பார்த்துக்கொள்வார், நீ எல்லாம் ஒரு பொம்பளையா, நீ நாசமாதான் போவ" என்று திட்டினார். சத்தம் அதிகமாக கேட்டதால் அங்கிருந்த வக்கீல்கள் திரு.ராமசாமி மற்றும் திரு.விஜயகுமார் ஆகியோர்கள் வந்தனர். S.S.I திரு.குமரேசன் அவர்களும் அங்கு வந்தார். S.S.I அவர்கள் சந்திராவிடம் ஏன் இவ்வாறு தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நீங்கள் யார் இதை கேட்பதற்கு என்று அவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். Return செய்த மனுக்களை Represent செய்வதற்காக, மீண்டும் 23.03.2022 ம் தேதியன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்தார். Represent செய்த மனுக்களை சரிபார்த்து, தலைமை எழுத்தர் நீதிபதி அம்மா அவர்களிடம் கொடுத்தார். நீதிபதி அம்மா அந்த மனுக்களை பார்த்து மீண்டும் Return செய்தார். அந்த மனுக்களை சந்திரா Return எடுக்கும்போது, தலைமை எழுத்தர் சற்று நேரம் வெளியில் இருங்கள், நாங்கள் சரிபார்த்துவிட்டு தருகிறோம் என்று கூறினார். அதற்கு சந்திரா நான் வெளியில் செல்லமாட்டேன், நான் வெளியில் சென்றால், ஏதாவது பேப்பரை நீங்கள் எடுத்துவிட்டால் என்ன செய்வது என்று கூறி, அரசு ஊழியர்களின் நாணயத்தை குறைத்து மதிப்பிடுமாறு பேசினார்.

3) மீண்டும் மறுநாள் 24.03.2022 அன்று நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்த சந்திரா, தலைமை எழுத்தரிடம் Return ஒவ்வொன்றிற்கும் காரணம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு தலைமை எழுத்தர், நீதிபதி அம்மாவிடம்தான் கேட்கவேண்டும் என்றும், அவர்தான் Return செய்தார் என்றும் கூறினார். அதற்கு சந்திரா நீதிபதி இதை எல்லாம் ஒழுங்காக படிக்கமாட்டாரா, பார்க்கமாட்டாரா, இப்படிதான் Return செய்வாரா என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இந்த வாக்குவாதத்தின்போது சந்திரா தலைமை எழுத்தரிடம், உன் மீது லஞ்ச ஒழிப்பில் புகார் கொடுத்துவிடுவேன் என்று மிரட்டினார். தலைமை எழுத்தர் நீதிமன்ற அலுவல் பணியில் இருந்தபோது, அவரை பணி செய்யவிடாமல் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு இடையூறு செய்து கொண்டிருந்தார். இது தொடர்பாக தலைமை எழுத்தர், நீதிபதி அம்மாவிடம் சென்று புகார் தெரிவித்தார். அப்போது, திறந்த நீதிமன்றத்திலிருந்த நீதிபதி அம்மா இது குறித்து விசாரிப்பதற்காக நீதிமன்ற அலுவலகத்திற்கு பெஞ்ச் கிளார்க்குடன் வந்தார்.

4) திறந்த நீதிமன்றத்தில் இருந்து, நீதிபதி அம்மா, மாடிப்படியில் மேலே ஏறி வரும்போது, சந்திரா படியில் கீழே இறங்கினார். அப்போது அம்மா என்ன பிரச்சனை ஏன் சத்தம் போட்டு கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நீதிபதி அம்மாவிடம் சந்திரா எப்படி நீங்கள் எனது மனுக்களை Return செய்யலாம், எப்படி எனக்கு எதிராக தீர்ப்பு கூறலாம் என வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது சத்தம் கேட்டு, அருகிலிருந்த நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் அங்கு வந்துவிட்டனர். S.S.I திரு.குமரேசன் அவர்களும் அங்கு வந்தார். S.S.I திரு.குமரேசன் அவர்கள் சந்திராவை அங்கிருந்து அழைத்து சென்றார். பிறகு நீதிபதி அம்மா அவர்களின் உத்தரவின்படி, தலைமை எழுத்தர், தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, மிரட்டி பணி செய்யவிடாமல் தடுத்த சந்திரா மீது பவானி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் ஆஜர் எதிரியால் குறுக்கு விசாரணை**-

1) நான் பவானி நீதிமன்றத்தில் 2017ம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வருகிறேன். O.S.No.147/2013 வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனது பணி Accounts, Bills போடுவதாகும். நான் மனுக்களை நம்பர் செய்யமாட்டேன். நான் தலைமை எழுத்தர் அறையில், அவருக்கு வலதுபுறம் அமர்ந்துள்ளேன். தலைமை எழுத்தர் அறையில் CCTV கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அ.சா.1 யை விசாரிக்கும்போது, நான் நீதிமன்ற அறையில் இருந்தேன் என்றால் சரிதான். மாண்புமிகு நீதிபதி அம்மா சொல்லி தான் அ.சா.1 போலீசில் புகார் கொடுத்ததாக சொல்லி உள்ள விவரம் சரியா என்றால் சரிதான். அ.சா.1 புகார் கொடுக்க சென்றதை நான் பார்க்கவில்லை.

2) நான் சொன்னதுபோல, எதிரி எந்த தகாத வார்த்தையும் சொல்லவில்லை என்றாலும், தன்னுடைய தந்தையின் வயது 85, தாயாரின் வயது 79, அவர்களுடைய சொத்து அவருக்கு இல்லை என்றால் உயிருடன் இருக்கமாட்டார்கள், எனவே விரைவாக நம்பர் செய்து தருமாறுதான் கேட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.1 யை நீதிமன்ற ஊழியர் திரு.ஈஸ்வரன் அழைத்து

சென்றபோது நான் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று 02.45 மணிக்கு நான் எனது அறையில் இல்லை என்றால் சரியல்ல, இருந்தேன். அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட CCTV பதிவு காட்சிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. என்னை S.S.I திரு.குமரேசன் அவர்களும், காவல் ஆய்வாளரும் விசாரித்தார்கள். படிக்கட்டில் நீதிபதி அம்மா ஏறி வரும்போது, எதிரி சந்திரா அவருக்கு எதிராக கீழே இறங்கி வருவதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன், அங்கு CCTV கேமரா இல்லை என்றால் சரிதான்.

3) நீதிமன்றத்தில் இருந்து வெளியே செல்வதை பார்ப்பதற்கு CCTV கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்துறை எதிரியின்மீது தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 புகார் மனுவை தட்டச்சு செய்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வழக்குகளை ஆன்லைனில் பதிவேற்றம் செய்பவர் யார் என்றால் தட்டச்சர் ஆவார்.

**மறுவிசாரணை இல்லை.**